ஒடிசா–மேற்குவங்கத்தை நெருங்கியது புயல்

▶ ஒடிசாவின் புரி மற்றும் மேற்கு வங்கத்தின் சாகர் தீவு இடையே இன்று அதிகாலை 'டானா' தீவிரப் புயல் கரை கடக்கிறது. இதனால் ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் அதி கனமழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை மேற்குவங்கத்தின் கிழக்கு மிட்னாபூர் பகுதியில் கடல் கொந்தளிப்பாக காணப்பட்டது. ஒடிசாவில் 10 லட்சம் பேரும், மேற்குவங்கத்தில் 3.50 லட்சம் மக்களும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திருச்சூரில் நகை தயாரிப்பு நிறுவனங்களில்

120 கிலோ தங்கம் பறிமுதல்

ஜிஎஸ்டி அதிகாரிகள் அதிரடி

திருவனந்தபுரம், அக். 25: கேரள மாநிலம் திருச்சூரில் ஏராளமான நகை தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. கடந்த பல வருடங்களாக இந்த நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்து வருவதாக ஜிஎஸ்டி துறையினருக்கு தகவல் கிடைத்தது.

மேலும் கடத்தல் தங்கத்தையும் இவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதையடுத்து ஜிஎஸ்டி துறையின் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு ஆணையர் ஆபிரகாம் தலைமையில் நேற்று முன்தினம் மாலை திருச்சூர் முழுவதும் நகை தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் கடைகளில் திடீர் சோதனை நடத்தினர்.

ஜிஎஸ்டி புலனாய்வு பிரிவை சேர்ந்த 700 அதிகாரிகள் இந்த அதிரடி சோதனையில் பங்கேற்றனர். ஒரே சமயத்தில் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

இதில் 120 கிலோவுக்கும் மேல் பதுக்கி வைக்கப்பட்ட தங்கம் கைப்பற்றப்பட்டது. எந்த ஆவணமும் இல்லாமல் இந்த தங்கத்தை பதுக்கி வைத்திருந்தனர்.

இந்த சோதனை நேற்று இரவு வரை 24 மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது.

கார் ஓட்டுனர் தற்கொலை

தேசிய திறந்தநிலை பள்ளிக்கல்வி நிறுவன தலைவர் நீக்கம்

புதுடெல்லி, அக்.25: தேசிய திறந்த நிலை பள்ளிக்கல்வி நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் சரோஜ் சர்மா. இவரது கார் ஓட்டுனர் செப்டம்பர் 27ம் தேதி இரவு தற்கொலை செய்து கொண்டார். அப்போது தலைவர் சரோஜ் சர்மா மீது குற்றம்சாட்டி கடிதம் ஒன்றை அவர் எழுதி வைத்து இருந்தார். இந்த தற்கொலை விவகாரத்தில் தொடர்புடையதாக குற்றம்சாட்டி சரோஜ் சர்மா மீது டெல்லி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்நிலையில் தேசிய திறந்த நிலை பள்ளிக்கல்வி நிறுவன தலைவர் பதவியில் இருந்து சரோஜ் சர்மாவை நீக்கி ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது.

காஷ்மீரில் ராணுவ வாகனம் மீது

தீவிரவாதிகள் தாக்குதல் 2 வீரர் உட்பட 4 பேர் பலி

ஸ்ரீநகர், அக். 25: காஷ்மீரில் ராணுவ வாகனத்தின் மீது நேற்று தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில்,2 வீரர்கள் உட்பட 4 பேர் பலியாகினர்.

காஷ்மீரில் தற்போது தீவிரவாதிகள் தாக்குதல் அதிகரித்து வருகிறது. சட்டப்பேரவை தேர்தல் சமயத்தில் கூட இந்த தாக்குதல் நீடித்தது. தற்போது மீண்டும் தாக்குதல் நடந்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டம், குல்மார்க் பகுதியில் நேற்று மாலை ஒரு ராணுவ வாகனம் சென்று கொண்டிருந்தது. அப்போது தீவிரவாதிகள் அந்த வாகனத்தின் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில், 2 ராணுவ வீரர்கள் வீரமரணமடைந்தனர். அதே போல் 2 அப்பாவி மக்களும் பலியானார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக புல்வாமா மாவட்டத்தில் பட்குண்ட் டிரால் என்ற பகுதியில் உபியை சேர்ந்த பிரித்தம் சிங் என்ற தொழிலாளரை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் படுகாயமடைந்தார்.

இதையடுத்து பாதுகாப்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். இதனால் அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

உ.பி. இடைத்தேர்தலில் காங். போட்டி இல்லை

சமாஜ்வாடி வேட்பாளர்களுக்கு ஆதரவு

புதுடெல்லி, அக்.25: உத்தரப்பிரதேசத்தில் வருகிற 13ம் தேதி காலியாக உள்ள 9 சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதில் சமாஜ்வாடி 7 தொகுதியிலும், காங்கிரஸ் 2 தொகுதியிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் சமாஜ்வாடி கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதை உறுதி செய்ய காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் நிபந்தனையின்றி பாடுபடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கர்நாடகாவில் சட்டப்பேரவை இடைத்தேர்தல்

குமாரசாமி மகன் போட்டி

பெங்களூரு, அக்.25: கர்நாடக மாநிலத்தில் சந்தூர், சென்னபட்டனா, ஷிகான் ஆகியோ சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நவம்பர் 13ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இதில் சென்னபட்டனா தொகுதி துணை முதல்வர் டி.கே.சிவகுமார், ஒன்றிய அமைச்சர் குமாரசாமி ஆகியோருக்கு சொந்தமானது. பாஜ மேலவை உறுப்பினராக இருந்த சி.பி. யோகேஸ்வர் அக்கட்சியில் இருந்து விலகி காங்கிரசில் இணைந்தார். அவரையே சென்னபட்டனா தொகுதி வேட்பாளராக காங்கிரஸ் அறிவித்தது. இந்நிலையில் காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக ஒன்றிய அமைச்சர் குமாரசாமியின் மகன் நிகில் குமாரசாமி களமிறக்கப்பட்டுள்ளார். இவர் இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

முதல்வரான பின் முதல்முறையாக

பிரதமர் மோடியை சந்தித்தார் உமர் அப்துல்லா

புதுடெல்லி, அக்.25: ஜம்மு மற்றும் காஷ்மீரில் சமீபத்தில் நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 42 தொகுதிகளை கைப்பற்றி தேசிய மாநாட்டு கட்சி வெற்றி பெற்றது. கட்சியின் தலைவர் உமர் அப்துல்லா கடந்த வாரம் முதல்வராக பொறுப்பேற்றார். இதனை தொடர்ந்து முதல் முறையாக டெல்லி வந்துள்ள உமர் அப்துல்லா நேற்று பிரதமர் மோடியை நேரில் சந்தித்து பேசினார்.

தீபாவளி, சாத் பூஜைக்கு 7,000 சிறப்பு ரயில்கள்

புதுடெல்லி, அக். 25: இந்த ஆண்டு தீபாவளி, சாத் பூஜையையொட்டி, தினசரி 2 லட்சம் கூடுதல் பயணிகள் பயணிக்க வசதியாக, 7,000 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என ரயில் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். குறிப்பாக இப்பண்டிகை காலத்தில் நாட்டின் கிழக்கு பகுதிகளுக்கு ஏராளமான பயணிகள் பயணம் செய்வதால் வடக்கு ரயில்வே சுமார் 3,050 சிறப்பு ரயில்களை இயக்குவதாக அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு வடக்கு ரயில்வே 1,082 சிறப்பு ரயில்களை இயக்கியது. இம்முறை 181 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டு குறித்து நாடாளுமன்ற குழு முன்பு

செபி தலைவர் ஆஜராகாமல் தவிர்ப்பு

வேணுகோபால் எம்.பி.க்கு எதிராக சபாநாயகரிடம் பாஜ புகார்

புதுடெல்லி, அக்.25: செபி தலைவர் மாதபி புரி புச் ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நாடாளுமன்ற பொது கணக்கு குழு முன் நேற்று ஆஜராகாமல் தவிர்த்து விட்டார். இந்த விவகாரம் தொடர்பாக பிஏசி தலைவர் கே.சி. வேணுகோபாலுக்கு எதிராக சபாநாயகரிடம் பாஜ கூட்டணி புகார் அளித்துள்ளது.

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) தலைவராக உள்ள மாதபி புரி புச் மற்றும் அவரது கணவரும் இணைந்து, அதானி குழுமம் வெளிநாடுகளில் உருவாக்கிய நிறுவனங்களில் ஏராளமான பங்குகளை வைத்திருப்பதாக அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் சமீபத்தில் குற்றம்சாட்டியது. இதற்காகவே அதானிக்கு எதிரான விசாரணையை செபி தீவிரமாக நடத்தவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டுகளை மாதபி மறுத்தார்.

இது தொடர்பாக மாதபி புச் சுக்கு நாடாளுமன்ற பொது கணக்கு குழு(பிஏசி) சம்மன் அனுப்பியது. அதன்படி, நாடாளுமன்ற குழு முன்பாக மாதபி புச் மற்றும் உறுப்பினர்கள் நேற்று ஆஜராகி விளக்கம் அளிப்பார்கள் என கூறப்பட்டது.

▶ மாதபி புரி புச், கே.சி.வேணுகோபால்

இந்த நிலையில், பொது கணக்கு குழு கூட்டம் மூத்த காங்கிரஸ் தலைவர் கே.சி. வேணுகோபால் எம்.பி தலைமையில் நேற்று நடந்தது. இதில் மாதபியும், செபி உறுப்பினர்களும் ஆஜராகாமல் தவிர்த்து விட்டனர். கூட்டம் தொடங்கியதும், ஆளும் கட்சி எம்பிக்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே காரசார வாக்குவாதம் நடந்தது. தங்களுடைய கருத்துகளை கூட்டத்தில் வெளியிட அனுமதி மறுக்கிறார் கே.சி. வேணுகோபால். மாதபி புரி புச் மற்றும் செபி உறுப்பினர்களுக்கு சம்மன் அனுப்பியது வேணுகோபாலின் தன்னிச்சையான முடிவு என்று பாஜ எம்பிக்கள் குற்றம் சாட்டினர். தொடர்ந்து கடுமையான விவாதம் ஏற்பட்ட நிலையில் வேணுகோபால் கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

வேணுகோபால் கூறுகையில், ''காலை 9.30 மணிக்கு செபி தலைவரும், உறுப்பினர்களும் தங்களுடைய தனிப்பட்ட வேலை காரணமாக பொது கணக்கு குழு முன் ஆஜராக முடியவில்லை என்று தெரிவித்தனர். இதனால், கூட்டத்தை இன்னொரு நாளுக்கு ஒத்தி வைப்பது என முடிவெடுத்துள்ளோம்'' என்றார்.

எதிர்க்கட்சி எம்பி ஒருவர் கூறுகையில்,'' பொது கணக்கு குழு கூட்டம் தொடங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்னர் தான் மாதபி புரி புச் தகவல் தெரிவித்தார். இது நாடாளுமன்ற குழுவை அவமதிக்கும் செயல்'' என்றார்.

பிஏசி உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத்(பாஜ) கூறுகையில்,''பிஏசி தலைவர் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார். ஒன்றிய கணக்கு தணிக்கை துறையின் (சிஏஜி) அறிக்கையை விவாதிப்பதே பொது கணக்கு குழுவின் வேலை. செபி பற்றி கணக்கு தணிக்கை துறை எந்த கருத்தும் தெரிவிக்காத நிலையில், தாமாக முன்வந்து தன்னிச்சையான சில விஷயங்களை அவர் செய்கிறார். ஒட்டுமொத்த நடவடிக்கையும் நாடாளுமன்ற விதிமுறைகளுக்கு எதிரானது'' என்றார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை தேஜ கூட்டணி எம்பிக்கள் சந்தித்து வேணுகோபாலுக்கு எதிராக புகார் அளித்துள்ளனர்.

மணிப்பூரில் ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் பறிமுதல்

இம்பால், அக்.25: மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதம் முதல் மோதல் நடக்கிறது. இந்நிலையில் காக்சிங் மற்றும் தவ்பால் மாவட்டங்களில் பாதுகாப்பு படையினர் நடத்திய சோதனையில் ஏராளமான ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. காக்சிங் பகுதியில் பிஸ்டல்கள், ரைபில்கள், கையெறி குண்டுகள், கார்பன் குண்டுகள், வெடிப்பொருட்கள் உள்ளிட்டவற்றை வீரர்கள் பறிமுதல் செய்தனர். இதேபோல் தவுபாலில் குவாரோக் மாரிங் நாட்டு துப்பாக்கி, துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சாலை விதி மீறல்களை தடுக்க ஏஐ தொழில்நுட்பம்

ஒன்றிய அமைச்சர் கட்கரி வலியுறுத்தல்

புதுடெல்லி, அக். 25: போக்குவரத்து விதிமீறல்களை தடுக்க செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என ஒன்றிய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி பேசினார்.

டெல்லியில் 12-வது போக்குவரத்து உட்கட்டமைப்பு தொழில்நுட்ப கண்காட்சி நேற்று நடந்தது. இதில் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி பேசுகையில்,'' சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவது முக்கியமானது.

ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் 5 லட்சம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதில், ஏராளமானோர் உயிர் இழக்கின்றனர். இந்த உயிரிழப்புகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18-36 வயதுக்குட்பட்டவர்கள். சாலை விபத்துகளால் ஏற்படும் பொருளாதார இழப்பு நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 3% ஆகும். சாலை பாதுகாப்பை மேம்படுத்துவது அரசின் முன்னுரிமையாகும். இதை தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமீபத்திய உலகளாவிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவு(ஏஐ) போன்ற அதிநவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். இதில், அபராத தொகை துல்லியமாக வசூலிக்கப்படும்'' என்றார்.

மகாராஷ்டிரா, ஜார்க்கண்டில்

இந்தியா கூட்டணிக்கு கெஜ்ரிவால் பிரசாரம்

புதுடெல்லி, அக்.25: பாஜவுக்கு எதிரான காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகளின் இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சியும் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பிரசாரம் மேற்கொள்ள உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக மகாராஷ்டிராவில் மகா விகாஸ் அகாதி கூட்டணி கட்சிகள்- உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா(யூபிடி) மற்றும் சரத் பவாரின் என்சிபி(எஸ்பி) வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். ஜார்க்கண்டில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவுக்கு ஆதரவாக கெஜ்ரிவால் பிரசாரம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்நாடு அரசு
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை
தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி,எ) அலுவலகம்
புதிய பசுமை வெளி விமான நிலைய திட்டம், மண்டலம்–I, காஞ்சிபுரம் மாவட்டம்

ந.க.73/2024/அ1 — படிவம் – ஆ — நாள் : 22.10.2024

தமிழ்நாடு தொழிலியில் நோக்கங்களுக்கான நிலஎடுப்பு சட்டம் 1997(தமிழ்நாடு சட்டம் 10/1999)
பிரிவு 3 உட்பிரிவு (2) ன் கீழான பொது அறிவிப்பு
திருத்த அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், 142 பரந்தூர்–அ மற்றும் 202 பரந்தூர்–ஆ கிராமங்களில் புதிய பசுமை வெளி விமான நிலையம் அமைக்கும் பணிக்காக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம்–1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)–ன்படி பிரிவு–3(2)–ன்கீழ் 19.08.2024 அன்று "தினகரன்" நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட பொது அறிவிப்பில் கீழ்கண்டவாறு திருத்தம் அளிக்கப்படுகிறது.

விவர அட்டவணை–01

மாவட்டம் காஞ்சிபுரம்	வட்டம் : காஞ்சிபுரம்	கிராமம்: 142 பரந்தூர்–அ
மண்டலம் –I	அலகு – 05	பிளாக் எண் –25

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டது			திருத்தி படிக்க வேண்டியது		
வ. எண்	புல எண் (ம) உட்பிரிவு எண்	நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள கட்டுமானங்களின் விவரம்	வ. எண்	புல எண் (ம) உட்பிரிவு எண்	நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள கட்டுமானங்களின் விவரம்
23	154/2D	1. வீடு (செங்கல் – ஆர்சிசி கூரை) – 1 2. சிமெண்ட் கம்பத்துடன் கூடிய கம்பிவேலி	23	154/2D	1. வீடு (G +1) (செங்கல் - ஆர்சிசி கூரை) - 1 2. சிமெண்ட் கம்பத்துடன் கூடிய கம்பிவேலி
59	137/1A	1. வட்டக் கிணறு (செங்கல்) –1 2. ஷெட் (செங்கல் – மெட்டல் அலாய் ஷீட் கூரை)–1	59	137/1A	1, வட்டக் கிணறு (செங்கல்) –1 2. ஷெட் (செங்கல் - மெட்டல் அலாய் ஷீட் கூரை)–1 3. ஆழ்துளைக் கிணறு–1

அலகு – 05	பிளாக் எண் – 25	கிராமம்: 202 பரந்தூர்–ஆ

67	1059/7	1. வீடு (செங்கல் – ஆர் சி சி கூரை)–1	67	1059/7	1. வீடு (செங்கல் – நாட்டு ஓட்டு கூரை)–1

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ)(மு.கூ.பொ)
புதிய பசுமை வெளி விமான நிலைய திட்டம்,
மண்டலம் – I, காஞ்சிபுரம் மாவட்டம்.

செ.ம.தொ.இ./ 328 /நிலம்கையகம்/2024

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 11–11–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்திவைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 11–11–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 09–11–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமின்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	TCHHL040400100073924 & TCHIN0404000100074601 & TCHIN0404000100104380 & TCHIN0404000100188217	திரு. மகேஷ் R திருமதி.பூஜா M	கடன் கணக்கு எண். TCHHL0404000100073924 இன் படி உங்களால் செலுத்தப் படவேண்டிய நிலுவைத் தொகை ரூ.22,56,014/- மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100074601இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.68,975/ மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100104380இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,58,913/- மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100188217இன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டியநிலுவைத் தொகை ரூ.5,16,602/-மொத்தம் ரூ.33,00,504/- & 21.09.2023	Rs. 27,00,000/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சம் மட்டும்)	Rs. 2,70,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	கையக
2.	TCHHL049000100066361 & TCHIN0490000100066427	திருமதி. ரேவதி B, M/S பிரீத்திநிக்வேர் திரு.பாலாஜி M	கடன் கணக்கு எண். TCHIN0490000100066427 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.44,956/- மற்றும் கடன் கணக்கு எண். TCHHL0490000100066361 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.29.69,284/- மொத்தம் ரூ.30,14,240/-(ரூபாய் முப்பது லட்சத்து பதினான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) & 19.12.2023.	Rs. 25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்)	Rs. 2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	கையக
4.	TCHIN0404000100126410 & TCHHL0404000100126043	திரு.ரிச்சர்டு ராஜதுரை கிருஷ்ணன், திருமதி.செல்வி R	கடன் கணக்கு எண். TCHHL0404000100126043 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.19,69,127/- மற்றும் கடன் கணக்கு எண்.TCHIN0404000100126410 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.96,656/- மொத்தம் ரூ.20,65,783/-& 23.08.2023.	Rs. 17,10,000/- (ரூபாய் பதினேழு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	Rs. 1,71,000/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	கையக
5.	TCHHL040400100070915	ரேவதி P திருமதி. கன்னியம்மாள் P	ரூ.41,38,719/- (ரூபாய் நாற்பத்தொரு இலட்சத்து முப்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) & 17.05.2022	Rs. 22,50,000/- (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	Rs. 2,25,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஆயத்தூர் கிராமம், சர்வே எண்கள்: 297, 293/3, 293/4 பட்டா எண்.656 இன்படி புதிய சர்வே எண்: 293/7& 297/3, மனை எண்.28–B, பவானி நகர் லேஅவுட்டில் (லேஅவுட் அனுமதி எண்.DTCP No.471/92 இன்படி) உள்ள 900 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.7, **தெற்கில்:** 30 அடி அகல சாலை, **கிழக்கில்:** ஏ.ரேணுகாதேவிக்குச் சொந்தமான மனை எண்.28–A, **மேற்கில்:** மனை எண்.29. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 18 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 50 அடி. மொத்த பரப்பளவு 900 ச.அடி. அட்டவணை–B, தரைத்தளம் 750 ச.அடி கட்டுமானம் பகுதியுடன் கூட இதர 100 ச.அடி கழிவுத்தொட்டி, மாடிப்படி, மின் சேவை, முன் உயர்நிலை வேலைகள், சுற்றுச்சுவர் உள்ள சொத்து.

அசையா சொத்தின் விவரங்கள்: மனை எண்.16, பரப்பளவு 1602 ச.அடி, மனை எண்.17 பரப்பளவு 1602 ச.அடி மொத்த பரப்பளவு 3204 ச.அடி, சர்வே எண்.93/33, பட்டா எண்.1259, ஓம்ஸ் கிரீன் சிட்டி என்று பெயரிடப்பட்டுள்ள லேஅவுட்டுக்கு (D.T.C.P. vide Lp/Dtcp No.256/2019, dt.30.05.2019) மனைத்திட்டத்தில், இது கிராமம் எண்.152, வட்டம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி வீட்டு மனை உள்ள சொத்து. மனை எண்.16 இன் **எல்லைகள்: வடக்கில்:** 23 அடி சாலை, **தெற்கில்:** சர்வே எண்.93/34 இல் உள்ள காலி மனை, **கிழக்கில்:** மனை எண்.15, **மேற்கில்:** மனை எண்.17 இன் **அளவீடு:** வடக்குப் பக்கம்–36 அடி, தெற்குப் பக்கம்–36 அடி, கிழக்குப் பக்கம்–44.6 அடி, மேற்குப் பக்கம்–44.6 அடி, **மொத்த பரப்பளவு 1602 ச.அடி. மனை எண்.17 இன் எல்லைகள்: வடக்கு:** 23 அடி சாலை, **தெற்கு:** சர்வே எண்.93/34 இல் உள்ள காலி மனை, **கிழக்கு:** மனை எண்.16, **மேற்கு:** மனை எண்.18 அளவீடு: வடக்குப் பக்கம் –36 அடி, தெற்குப் பக்கம் –36 அடி, கிழக்குப் பக்கம் –44.6 அடி, மேற்குப் பக்கம் –44.6 அடி, **அனைத்து பரப்பளவு 1602 ச.அடி.** மனை எண்கள்.16,17 அனைத்து அளவீடு (1602+1602) மொத்தம் 3204 ச.அடி நிலம் காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

அசையா சொத்தின் விவரங்கள்: காஞ்சிபுரம் ஸ்ரீ பெரும்புதூர் தாலுகா, எண்.43, வடமங்கலம் கிராமம், மாவட்டம், சர்வே எண்.223/1 &223/2, மனை எண்.7, ஸ்ரீ ஸ்ரீனிவாச வி நகர், (DTCP அங்கீகார எண்.280/2006), 1906 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உடைய சொத்து. **எல்லைகள்: வடக